தேதி 31.01.2026 நேரம் மாலை 6.10 மணி

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

__தலைப்புச் செய்திகள்__

- இந்தியாவுக்கும், அரபு நாடுகளுக்கும் இடையிலான, ஆழமான மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க உறவுகள் மேலும் வலுப்பெறும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று ஓமன் வெளியுறவு அமைச்சருடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.
- மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் 2026-27ஆம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை நாளை தாக்கல் செய்கிறார்.
- புதுச்சேரியில், வேளாண் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் காய்-கனி-மலர் கண்காட்சி நாளை நிறைவு பெறுகிறது

__மோடி__

இரண்டாவது இந்திய-அரபு வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்க புதுடெல்லி வந்துள்ள அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் குழு, அரபு நாடுகளின் பொதுச் செயலர்கள் மற்றும் பிரதிநிதிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வரவேற்றார். இந்த சந்திப்பின்போது இந்தியாவுக்கும், அரபு நாடுகளுக்கும் இடையிலான, ஆழமான மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க உறவுகளை பிரதமர் எடுத்துரைத்தார். மேலும், வரும் ஆண்டுகளில் அரபு நாடுகளுடனான பரஸ்பர வர்த்தகம் மற்றும் முதலீடு, எரிசக்தி, தொழில்நுட்பம் சுகாதாரம் மற்றும் பிற துறைகளிலுள்ள ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் சுட்டிக் காட்டினார்.

**ஜெய்சங்கர் ஓமன்**

இரண்டாவது இந்திய-அரபு வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் இன்று புதுடெல்லியில் நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு இந்தியாவும், ஐக்கிய அரபு அமீரகமும் இணைந்து தலைமை தாங்குகின்றன. அரபு லீக் உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும், பொது செயலாளர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்கின்றனர். புதுடெல்லியில் இந்தியா நடத்தும் முதல் இந்திய அரபு வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் இதுவாகும். இதற்கிடையே, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று ஓமன் வெளியுறவு அமைச்சர் Badr Albusaidi-யை சந்தித்து இருதரப்பு வர்த்தகம், பிராந்திய முன்னேற்றங்கள் மற்றும் முக்கியமான கனிமங்கள் குறித்து விவாதித்ததாக சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். இந்தப் பேச்சுவார்த்தை இருநாடுகளுக்கிடையேயான நட்புறவையும், இணக்கத்தையும் அளிப்பதாக உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரக வெளியுறவு அமைச்சர் திரு. கலிஃபா ஷாஹிம் அல் மராரும், இம்மாநாட்டில் பங்கேற்க இன்று அதிகாலை இந்தியா வந்துள்ளார்.

**ஜெய்சங்கர் ஓமன்**

இந்தியா-அரபு வர்த்தகம் 240 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமாக உள்ளது. இருதரப்பு ஹைட்ரோகார்பன் வர்த்தகம் 107 பில்லியன் டாலர்களை தாண்டியுள்ளது. அரபு லீக் நாடுகளிலிருந்து இந்தியா 95 சதவிகிதத்திற்கும் அதிகமான LPG, 60 சதவிகித LNG மற்றும் கச்சா எண்ணெய் தேவையில் 47 சதவிகித த்திற்கும் அதிகமாக இறக்குமதி செய்கிறது. மேலும் 50 சதவிகித்திற்கும் அதிகமான உரங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்திய நிறுவனங்கள் ஓமன், ஐக்கிய அரபு அமீரகம், ஈராக், குவைத், பஹ்ரைன்,

ஜோர்டான், சிரியா சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளில் எரிசக்தி துறையில் முதலீடு செய்கின்றன.

மேலும், இந்தியா மற்றும் அரபு நாடுகள் கூட்டாண்மை உணவு மற்றும் எரிசக்தி, நிதி, சுகாதாரம், கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் நட்புறவுடன் செயல்பட்டு வருகின்றன. 9 மில்லியனுக்கும் அதிகமான இந்திய புலம் பெயர்ந்தோர் அரபு லீக் நாடுகளில் வாழ்கின்றனர்.

***நிர்மலா சீதாராமன்***

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நாளை மக்களவையில் 2026-27ஆம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார். மக்களவையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு பட்ஜெட்டின் நகல் மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்படும். 2019ஆம் ஆண்டு பதவியேற்றதில் இருந்து திருமதி நிர்மலா சீதாராமன் தொடர்ந்து தக்கல் செய்யும் 9ஆவது பட்ஜெட் இது என்பது குறிப்பிடத்தக்கது.

பட்ஜெட் தாக்கலுக்குப் பின்னர், நிதி, பொருளாதாரம், ஆளுமை, ஜனநாயக நடைமுறைகள் ஆகியவற்றுடன், தேசக் கட்டமைப்பில் இளையோர் பங்களிப்பை உறுதி செய்யம் வகையில் கல்லூரி மாணவர்களுடன் நிதியமைச்சர் கலந்துரையாடவுள்ளார். முதல் முறையாக ஞாயிற்றுக்கிழமை பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் நிலையில், மும்பை தேசிய பங்குச்சந்தையில் நாளை சிறப்பு வர்த்தகம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

***சி.பி. ராதாகிருஷ்ணன்***

Faridabad-ன் 39ஆவது சூரஜ்குண்ட் சர்வதேச கைவினை கண்காட்சி 2026-ஐ இன்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தொடக்கி வைத்தார். உள்ளூர் முதல் உலகம் வரை-ஆத்ம நிர்பர் பாரத்

என்ற கருப்பொருளை மையமாக கொண்டு இந்த கண்காட்சி நடைபெறுகிறது.

<u>பூபேந்திர யாதவ் -மோடி</u>

இந்தியாவின் ராம்சர் வலை அமைப்பில் இரண்டு புதிய சதுப்பு நிலங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் அறிவித்துள்ளார். 2014ஆம் ஆண்டு 26 தளங்களில் இருந்த இந்தியாவின் ராம்சர் வலையமைப்பு, தற்போது 98 இடங்களாக விரிவடைந்துள்ளது என்றும் அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

உத்தரபிரதேசத்திலுள்ள ஈட்டா பறவைகள் சரணாலயமும், குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்திலுள்ள Chhari-dhand ஆகியவை ராம்சர் தளங்களாக அறிவிக்கப்பட்டிருப்பதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இது குறித்து அப்பகுதி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துக்கொள்வதாக கூறினார். பல்லுயிர் பாதுகாப்பில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக தெரிவித்துள்ள பிரதமர், ராம்சர் தளங்களை பாதுகாப்பதற்கும் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும், சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

<u>தர்மேந்திர பிரதான்</u>

செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தில் இந்தியா முன்னிலையில் உள்ளதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி தொலைநோக்குப் பார்வையுடன் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா வல்லரசாக உருவெடுக்கும் என்று அவர் தமது சமூக ஊடகப் பதிவில் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். இந்த தொழில்நுட்பம் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

***மலர் கண்காட்சி***

புதுச்சேரியில், வேளாண் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் வேளாண் விழா, மற்றும், 36 ஆவது காய்-கனி-மலர் கண்காட்சி தாவரவியல் பூங்காவில் நடைபெறுகிறது.

***மலர் கண்காட்சி***

இக்கண்காட்சியில் மலர்ப் படுகை, கனி வடிவமைப்பு, அலங்கார மலர்ச் செடிகள், காய்கறி மற்றும் தோட்டப் பயிர்களும், பல்வேறு அரசுத் துறைகளின் அரங்குகளும் இடம் பெற்றுள்ளன. இயற்கை விவசாயம் குறித்த முக்கிய அரங்கு ஒன்றும் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட வெளி நாடுகளில் இருந்தும் இறக்குமதியாளர்கள் பங்கேற்கின்றனர்.

உள்ளூர் வேளாண் துறை சார்பில் 40 ஆயிரம் பூக்களும், பெங்களூர் புனே பகுதிகளிலிருந்து 10 ஆயிரம் பூக்கள் என 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பல வண்ண மலர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மலர்களால் அலங்கரிங்கப்பட்ட போர் விமானம், யானை, பழங்கள் மற்றும் காய்கறிகளில் அலங்கரிக்கப்பட்ட விநாயகர் உள்ளிட்ட வடிவங்கள் அனைவரையும் கவரும் விதமாக உள்ளன. இது மட்டுமல்லாமல் இசை, நடன நீரூற்று, வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் அதனைச் சார்ந்த நிறுவனங்கள் தங்களின் புதிய கண்டுபிடிப்புகளை அரங்குகளாக அமைத்துள்ளன. மானிய விலையில் அலங்கார பூச்செடிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

***மலர் கண்காட்சி***

வேளாண் மற்றும் விவசாய நலத்துறை ஏற்பாடு செய்துள்ள இக்கண்காட்சி இரவு 9 மணி வரை திறந்திருக்கும் என்றும், அனுமதி இலவசம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

***அக்னிவீர்***

அக்னிவீர் பொதுப்பணி, தொழில்நுட்பம், ட்ரேட்ஸ்மென் உள்ளிட்ட பணிகளுக்கு, ஆள் சேர்ப்பு முகாம் பிப்ரவரி 5ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை வேலூர் மாவட்டம், காட்பாடி விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது. online பொதுத்தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பிரிவு விண்ணப்பதாரர்களும் www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது குறித்த மேலும் விபரங்களுக்கு, 044-25674924 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

***உழவர்கரை சுரேஷ்ராஜ்***

புதுச்சேரி, உழவர்கரை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வியாபாரம் செய்வோர் தங்களது வர்த்தக உரிமத்தை பெற்றிருக்க வேண்டும் என்று ஆணையர் திரு.சுரேஷ்ராஜ் அறிவித்துள்ளார். வரும் பிப்ரவரி 28ஆம் தேதிக்குள் தங்களது உரிமங்களை உழவர்கரை நகராட்சி வருவாய் பிரிவிலோ அல்லது www.lgrams.py.gov.in என்ற இணையதளம் வாயிலாகவோ பெறலாம் அல்லது புதுப்பிக்கலாம் என்றும் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

***மன்சுக் மாண்டவியா*** (11)

2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு புதுச்சேரி பா.ஜ.க. சார்பில் பொதுமக்களிடமிருந்து வாக்குறுதிகளுக்கான கருத்துகள் கேட்டறியும் கருத்து கேட்பு நிகழ்ச்சி, மத்திய பாஜக மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. மன்சுக் மாண்டவியா தலைமையில், இன்று கடற்கரைச் சாலை காந்தி சிலை அருகே நடைபெற்றது. பொதுமக்கள் ஆர்வமுடன் தங்களது கருத்துக்களை பதிவுசெய்து, கருத்துப் பெட்டியில் சமர்ப்பித்தனர். மேலும், அரியாங்குப்பம்

மணவெளி மற்றும் முதலியார்பேட்டை சட்டமன்றத் தொகுதிகளில் கிளை கமிட்டி கூட்டங்கள் நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் பாஜக மாநில தலைவர் திரு.வி.பி.ராமலிங்கம், மாநில பொறுப்பாளர் திரு. நிர்மல் குமார் சுரானா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

<u>புதுச்சேரி கேரா</u>

புதுச்சேரியில் வரும் சட்டமன்ற தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் திரு. பவன் கேரா கூறியுள்ளார். புதுவை பிரதேச காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், புதுச்சேரியில் உள்ள அனைத்து வசதிகளும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டவை என்றும், அந்த ஆட்சி திரும்பவும் ஏற்பட வேண்டும் என்று மக்கள் விரும்புவதாகவும் கூறினார். இந்த சந்திப்பின்போது முன்னாள் முதலமைச்சர் திரு. நாராயணசாமி, சட்டமன்ற உறுப்பினர் திரு.வைத்தியநாதன் மற்றும் அக்கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர். முன்னதாக காங்கிரஸ் கட்சி சார்பில் நடைபெற்ற பாதயாத்திரையில் திரு. பவன் கேரா பங்கேற்றார்.

<u>கிரிக்கெட்</u>

இந்திய-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 5ஆவது மற்றும் இறுதி 20 ஓவர் கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் இன்றிரவு 7 மணிக்கு தொடங்குகிறது. 5 போட்டிகள் கொண்ட இந்தியா ஏற்கனவே 3 போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியுள்ளது.